OS 110/2018

வா.சா. 3 சிவசங்கரன் த/பெ இந்திரபானு

நாள் 06.03.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் வாதியின் கோரா மிஷின் பேக்டிரியில் வேலை செய்து வருகின்றேன். என்னிடம் காட்டப்படும் என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். வாதி இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்கும் படி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. எனக்கு பிரதிவாதி அமுதாவை தெரியாது ஆனால் பெயர் சொல்லி கேள்விப்பட்டுள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதியை எனக்கு தெரியாது என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பு யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். நான் +2 வரை படித்துள்ளேன்.

3. நான் வாதியிடம் கணக்கர் வேலை மற்றும் எழுத்து வேலை அனைத்தும் செய்கிறேன். வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பு வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். மேலும் வா.சா.ஆ2 மேடோவர் குறித்த பரிவர்த்தனை நடந்த சமயத்தில் நான் அங்கு இருந்தேன். அதனால் வாதி என்னிடம் எழுத சொன்னார்.

4. 17.10.2006 தேதியில் ஏற்பட்ட அடமானம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தான் இந்துமதியின் சார்பாக பிரதிவாதியிடம் மாதாமாதம் வட்டியை பெற்று இந்துமதியிடம் கொடுப்பேன் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் ஒவ்வொரு மாதமும் பிரதிவாதியின் கணவர் வேலை செய்யும் அலுவலகத்திற்கு சென்று நான் தான் ரூ.10,000/- வட்டியாக பெற்று வருவேன் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வாதியும் இந்துமதியும் தந்தை மகள் உறவு முறை என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2006ம் வருடம் இந்துமதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு ஆனது. இந்துமதி திருமணத்திற்கு முன்பு வேலை எதுவும் செய்தார்களா என்றால் இல்லை. வீட்டில் தான் இருந்தார். நான் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வாதியும் இந்துமதியும் ஒன்று சேர்ந்து பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6. நான் உரிமம் பெற்ற ஆவண எழுத்தர் இல்லை என்றால் சரிதான். அதனால் மேடோவர் குறிப்பு எழுதுவதற்காக சட்ட திட்டங்கள் எனக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் இந்துமதிக்கு பவ்வியப்பட்டு தான் வா.சா.ஆ2 எழுதினேன் என்றும் அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பின் சாட்சிகள் சத்தியராஜ் என்பவர் வாதியின் கோரா மிஷினில் வேலை செய்பவர். மற்றொரு சாட்சியான தாமோதரன் வாதியிடம் பட்டு வாங்கும் பரிவர்த்தனை செய்யும் நபர் ஆவார்.